# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in
Website: www.tnteu.ac.in


No.TNTEU/R/DR-II/Circular/2022/ **நாள்:** 05.09.2022

**முனைவர். மூ.சௌந்திரராஜன், பி.எச்.டி,**
**பதிவாளர் (பொ)**

பெறுநர்

**முதல்வர்கள்/நிர்வாகிகள்**
அனைத்து இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - பல்கலைக்கழகத்தில் இயங்கும் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சார்பில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் முதல்வர்கள் உள்ளிட்ட ஆசிரியர்களில் ஒரு கல்லூரிக்கு ஒரு ஆசிரியருக்கு சிறந்த ஆசிரியர் விருது வழங்க திட்டமிடப்பட்டுள்ளது – நிர்வாகத்தின் சார்பில் ஒரு ஆசிரியரை விருதுக்கு பரிந்துரைக்க கோருதல் சார்பு.

**பார்வை:** பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்க கூட்ட தீர்மானம் நாள்: 05.09.2022

*****

**அனைவருக்கும் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்!**

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இயங்கும் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சார்பில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் முதல்வர்கள் உள்ளிட்ட ஆசிரியர்களில் ஒரு கல்லூரிக்கு ஒரு ஆசிரியர் வீதம் **சிறந்த ஆசிரியர் (Best Teacher Award)** என்ற விருதினை ஓவ்வொரு ஆண்டும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2022–23 ஆம் கல்வியாண்டிற்கு, உரிய, சிறந்த ஆசிரியர் விருதினை வழங்குவதற்கு, கீழ்க்குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, கல்லூரி முதல்வர்கள் / நிர்வாகிகள் தங்கள் கல்லூரிகளில் பணிபுரியும் முதல்வர்கள் உள்ளீட்ட ஒரு ஆசிரியரை நிர்வாகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட தேர்வுக்குழுவின் முடிவினை பின்பற்றி வருகின்ற 15.09.2022க்குள் alumniawardtnteu@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவும், விண்ணப்படிவம் மற்றும் பிற ஆவணங்களை விரைவு அஞ்சல் வாயிலாக **இயக்குனர் முன்னாள் மாணவர்கள் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், காரபாக்கம், சென்னை – 600097** என்ற முகவரிக்கு அனுப்பி பரிந்துரை செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுகொள்ளப்படுகிறது.

6-9-22

பதிவாளர் (பொ)

**Copy to:**

1. Deputy Registrars
2. P.A to VC
3. Assistant Registrars

# வழிக்காட்டு நெறிமுறைகள்

1. விருதுக்கு பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் / முதல்வர்கள் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட கல்லூரியில் முன்றாண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்.

2. ஆசிரியர் / முதல்வர்கள் முழுநேர பணியாளர்களாக பணிபுரிந்து ஊதியம் பெறுவராக வேண்டும்.

3. ஆசிரியர் / முதல்வர்கள் பல்கலைக்கழகத்தில் தகுதி ஓப்புதல் பெற்றவராக இருக்க வேண்டும்.

4. ஆசிரியர் / முதல்வர்களால் கல்லூரியின் மேன்பாட்டிற்கும், மாணவர்களின் மேன்பாட்டிற்கும் செய்த அர்பணிப்பு செயல்கள் குறித்த சுருக்க குறிப்பு (Short Notes) விண்ணப்பத்துடன் நிர்வாகத்தினால் கல்லூரியின் Letter Head-இல் எழுதி இணைத்து அனுப்பட வேண்டும்.

5. சமூகம் / கல்லூரி / மாணவர்கள் முன்னேற்றத்திற்க்காக செய்யப்பட்ட செயல்பாடுகள் குறித்து உரிய ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

6. நல்லாசிரியரின் ஏழு குணங்கள் ; நூலறிவு, பொது அறிவு, பட்டறிவு, பகுத்தறிவு, அர்ப்பணிப்பு, அரவனைப்புடன் கூடிய கண்டிப்பு எனவே இவ்ஏழு குணங்களில் சிறந்து விளங்கும் ஆசிரியரை பரிந்துரை செய்யலாம்.

7. ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் கற்பிப்பது அல்ல மாறாக, ஒழுக்கம், பண்பு, பொது அறிவு, ஆன்மிகம் என அனைத்தையும் எடுத்துரைத்து மாணவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னதபணியாகும் எனவே சிறந்த ஆசிரியர் விருதுக்கு தகுதியுள்ள ஆசிரியர்களை மட்டுமே பரிந்துரைக்குமாறு கேட்டுகொள்ப்படுகிறது.

8. ஆசிரியர்களை தேர்வு செய்வதற்க்கான தேர்வுக்குழு கீழ்கண்டவாறு உறுப்பினர்களை உள்ளடைக்கியவாறு இருத்தல் வேண்டும். தேர்வுக்குழுவின் பரிந்துரை கடிதம் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்

| | |
|---|---|
| 1. | நிர்வாக பிரதிநிதி |
| 2. | முதல்வர் |
| 3. | மூத்த போரசிரியர் அல்லது போரசிரியரில் ஒருவர் |
| 4. | II[nd] year B.Ed மாணவ பிரதிநிதி |
| 5. | II[nd] year M.Ed மாணவ பிரதிநிதி (If applicable) |
| 6. | நிர்வாக பணியாளர்களில் ஒருவர் |

# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097

**முன்னாள் மாணவர்கள் சங்கம்**

**சிறந்த ஆசிரியர் விருதுக்கான விண்ணப்பம்**

**Passport size**

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்லூரி அமைந்துள்ள மாவட்டம் | : | |
| 2. | கல்லூரியின் பெயர் மற்றும் கல்லூரியின் வரிசை எண் | : | |
| 3. | கல்லூரியின் முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 4. | கல்லூரி நிர்வாகியின் பெயர் மற்றும் கைபேசி எண் | : | |
| 5. | ஆசிரியர் பெயர் (தமிழில்) | : | |
| 6. | ஆசிரியர் பெயர் (ஆங்கிலத்தில்) | | |
| 7. | பதவி | : | |
| 8. | பாலினம் | : | |
| 9. | பிறந்த தேதி | : | |
| 10. | ஆசிரியர் கைபேசி எண் & வீட்டு முகவரி | : | |
| 11. | இக்கல்லூரியில் சேர்ந்த நாள் | : | |
| 12. | பல்கலைக்கழத்தின் தகுதி ஒப்புதல் விவரம் (எண்/நாள்) நகல் இணைக்கவும் | : | |
| 13. | இணையதள பயன்பாட்டு பலகையை பயன்படுத்தி பாடங்கள் நடத்தியுள்ளரா? | : | ஆம்/இல்லை |
| 14. | கற்றல் கற்பித்தல் தொழில் நுட்பத்தை கையாண்டு பாடங்கள் நடத்தியுள்ளரா? | : | ஆம்/இல்லை |
| 15. | மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்ப பாடம் நடத்தும் வல்லமை பெற்றவரா? | : | ஆம்/இல்லை |
| 16. | ஆசிரியர் கல்லூரி இணை செயல்பாடுகளில் பொறுப்பாசிரியராக செயல்பட்டுள்ளரா? | : | ஆம்/இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 17. | ஆசிரியர் தேசிய விழாக்கள் நடத்துவதில் பங்கு பெற்றுள்ளரா? | : | ஆம்/இல்லை |
| 18. | மாணவர்களின் தனித்திறன்கள் ஊக்குவிக்கக் கூடிய வகையில் செயல்படுகிறரா? | : | ஆம்/இல்லை |
| 19. | ஆசிரியர் மாணவர்களின் ஒழுக்கத் திறனை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தியுள்ளரா? | : | ஆம்/இல்லை |
| 20. | ஆசிரியரால் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதா? | : | ஆம்/இல்லை |
| 21. | ஆம், எனில் நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | : | |
| 22. | ஆசிரியரின் பணி அனுபவம் விபரம் (அனுபவ சான்று நகல் இணைக்கவும்) | : | |
| 23. | ஆசிரியர் சார்ந்து வேறு ஏதேனும் விபரங்கள் இருப்பின் குறிப்பிடுக. **(Separate Sheet may be enclosed)** | : | |
| 24. | **ஆசிரியரின் தனித்திறன்கள் :** நூல் வெளியிடுதல், அர்பணிப்பு செயல்பாடுகள், சமூகம் சார்ந்த செயல்பாடுகள் **(Separate Sheet may be enclosed)** | : | |



**இணைப்புகள்**

1. பணி அனுபவ சான்று நகல்
2. பல்கலைக்கழக தகுதி ஒப்புதல் நகல்
3. சுருக்க குறிப்பு
4. தேர்வுக்குழு பரிந்துரைக்கடிதம்
5. செயல்பாடுகள் குறித்த விளக்க குறிப்பு

**ஆசிரியர் கையொப்பம்**

**முதல்வர் கையொப்பம்**
**& கல்லூரி முத்திரை**

**நிர்வாகியின் கையொப்பம்**
**& கல்லூரி முத்திரை**